# கரூர் நகராட்சி
## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2020ம் ஆண்டு பிப்ரவரி 20ம் நாள் வியாழக்கிழமை மாலை 4.20மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற அவசரக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1) கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கரூர்– திருச்சி, கரூர்– ஈரோடு, கரூர்– கோவை செல்லும் நெடுஞ்சாலைத்துறையின் சாலையில் அதிகப்படியான வாகனங்கள் செல்லும் சாலையாக உள்ளது. மேலும் தமிழ்நாட்டின் மையத்தில் ஜவுளி தொழில் வளர்ச்சி அடைந்து வரும் நகரமாக கரூர் அமைந்துள்ளது. திருச்சி முதல் கோவை, சேலம் முதல் மதுரை தேசிய நெடுஞ்சாலைகளில் இருந்து கரூர் நகருக்கு வரும் வாகனங்கள் இந்த சாலையினை அதிகளவு பயன்படுத்தி வருகின்றனர். கரூர் நகருக்கு தினசரி ஜவுளி ஏற்றுமதி நிறுவனத்தில் பணிபுரிய அருகில் உள்ள பகுதியில் வசிக்கும் பணியாளர்கள் இரயில் மூலம் அதிகப்படியாக வந்து செல்லும் முக்கிய இடமாக உள்ளது. இரத்தினம் சாலை அதிக போக்குவரத்து உள்ள மிகவும் முக்கியமான சாலையாக உள்ளது.

மேற்படி சாலையின் இருபுறமும் சாலை ஓரத்தில் அமைக்கப்பட்டுள்ள தெரு விளக்குகளின் வெளிச்சம் இரவு நேரங்களில் சாலையின் அகலத்திற்கு போதுமானதாக இல்லாமல் உள்ளது. இதனால் வாகன ஓட்டுநர்கள் வாகனத்தை இயக்குவதில் மிகுந்த சிரமப் படுவதினால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகிறது. கரூர் – ஈரோடு சாலை மற்றும் கரூர் – திருச்சி சாலை மற்றும் இரயில் நிலைய ரத்தினம் சாலை ஆகிய மூன்று இடங்களும் போக்குவரத்து காவல் துறையினரால் அதிக விபத்து ஏற்படக்கூடிய ( Hot spot) இடங்களாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த சாலையில் விபத்துகள் ஏற்படுவதைத் தவிர்ககவும். இரவு நேரங்களில் வாகனங்கள் சாலையில் எளிதாகச் சென்று வரவும், இந்த பிரதான சாலையில் இரவு நேரத்தில்

போதிய மின் ஒளியுடன் பராமரிக்க சாலையின் மையப் பகுதியில் தெருவிளக்குகள் அமைத்து,

சாலையின் இருபுறமும் ஒளி தரக்கூடிய எல்.இ.டி.( LED) தெருவிளக்குகளை கரூர் கோவை சாலை மற்றும் ஈரோடு சாலை , சுங்ககேட் முதல் நரிக்கட்டியூர் பிரிவு சாலை , இரயில் நிலையம் ரத்தினம் சாலை வரை 270 எண்கள் சாலையின்மையத்தில் தெரு மின்விளக்குகளை அமைக்க ரூ. 435 இலட்சத்திற்கு சாலை பாதுகாப்பு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு வேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதின் பேரில், கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் கடித எண். ஈ4/ 11983 /2019 நாள். 07.02.2020–ல் மேற்காணும் சாலையில் சாலையின் மையத்தில் தெருமின்விளக்குகள் அமைக்கும் பணிக்கு

ரூ. 435 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிக்கு தொழில் நுட்ப அனுமதி வேண்டி தலைமைப் பொறியாளர் , நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களுக்கு மதிப்பீட்டினை சமர்ப்பிக்கவும் அனுமதிக்கலாம். (இ1/9940/2019)

தீர்மான எண்.2019 அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் நகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி, புல எண்.896, நத்தம் புறம்போக்கு 2.74.5 ஏர்ஸ், ஆதிதிராவிடர் காலனி, வார்டு எண்.33 பாரதியார் நகர், வார்டு எண்.34ல் சிலோன் காலனி, ஆதிதிராவிடர் காலனி ஆகிய பகுதிகளில் அடிப்படை வசதிகள் அனைத்தையும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக செய்து கொள்ள தடையின்மை சான்று வழங்க கோரியுள்ளார். மேற்படி பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஆனைத்தையும் தமிமிழநாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக மேற்கொள்வதால் இந்நகராட்சிக்கு செலவினம் குறையும்.

ஆதலால் மேற்படி பகுதிகளில் அடிப்படை வசதிகள் அனைத்தையும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக மேற்கொள்வதற்கு தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம். (எப்1/1044/2020)

தீர்மான எண்.2020 அனுமதிக்கப்பட்டது

3)இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட வரியற்ற இனங்கள் மற்றும் குத்தகை இன கடைகள் வாடகை தொடர்பாக பல்வேறு வழக்குகள் மேற்படி கடை உரிமதாரர்களால் தொடரப்பட்டு கீழ்காணும் நீதிமன்றங்களில் நடைபெற்று வருகிறது.

1) கரூர் மாவட்ட முதன்மை நீதிமன்றம்
2)கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
3)முதன்மை சார்பு நீதிமன்றம்
4)கூடுதல் சார்பு நீதிமன்றம்
5)மாவட்ட முதன்மை நீதிமன்றம்

மேற்காணும் நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருருடட்டு நகராட்சி நிலை வழக்கறிஞர்களான திரு.ஏ.முகமது யூசுப் மற்றும் திரு.பி.நகுல்சாமி ஆகியோருடன் ஒருங்கிணைந்து அரசு வழக்கறிஞர் திரு.பி.ஜெகநாதன் அவர்களை நகராட்சி சார்பில் எதிர் வழக்காட நியமனம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம். (சி5/12599/2016)

தீர்மான எண்.2021 அனுமதிக்கப்பட்டது

4)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.36, வடக்கு காந்திகிராமம் பகுதியில் சணப்பிரட்டி கிராமம், சர்வே எண்கள் 1481, 1482, 1483, 1484ல் அரசாணை (நிலை) எண் 97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.14.09.2017ல் 17.45 ஏக்கர் இடத்திற்கும், அரசாணை (நிலை) எண் 19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.07.02.2019ன்படி 10.04 ஏக்கர் இடத்திற்கும் ஆக மொத்தம் நகராட்சிக்கு சொந்தமான 27.49 ஏக்கர் இடத்தில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டுவதற்கு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து பொதுப்பணி துறையின் மூலம் கட்டுமான பணிகள் முடிவுற்று தற்போது பயன்பாட்டில் உள்ளது. தற்போது மருத்துவகல்லூரி செயல்பட துவங்கி உள்ளதால் மாணவ, மாணவியர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர்கள் வந்து செல்ல ஏதுவாக மருத்துவ கல்லூரி மற்றும் அரசு மருத்துவமனையினை சுற்றியுள்ள அனைத்து சாலைகள் மற்றும் வடிகால்கள் அமைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. 27சாலைகள் 6.768 கி.மீ நீளத்திற்கு அமைக்கவும் அந்த சாலைகளில் இருபக்கமும் மூடியுடன் கூடிய வடிகால் 9.142 கி.மீ நீளத்தில் அமைக்கவும், புதிய தெருவிளக்கு வசதிகள் மற்றும் சாலை மையதடுப்பான்கள் அமைக்கவும் அதற்காக தற்போது 2019–2020ம் ஆண்டிற்கு தரப்படுத்தப்பட்ட பொதுபணிதுறை விலை விகித அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு ரூ.16.50கோடியினை சிறப்பு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்க

வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது

.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம். (இ1/605/2020)

தீர்மான எண்.2022 அனுமதிக்கப்பட்டது

5)கரூர் நகராட்சியில் 14ஆம் மத்திய நிதிக்குழுவின்2019–2020ஆம் ஆண்டிற்கான முதல் தவணை மானியத் திட்டத்தில் 15 சாலை பணியினை மேற்கொள்ளுதலின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் 09.01.2020 ம் தேதி அன்று தஞ்சை மாலை முரசு பிரைவேட் லிமிடெட், திருச்சி மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ. 3150 /–ஐ தஞ்சை முரசு பிரைவேட் லிமிடெட், திருச்சி அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.3150 /– பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/6991/2019)

தீர்மான எண்.2023 அனுமதிக்கப்பட்டது

6)கரூர் நகராட்சி அலுவலகம் மற்றும் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் குடியரசு தின விழாவிற்கான (2020) ஏற்பாடுகள் செய்தல் பணிக்கு முதன்முறையாக 23.01.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50லட்சம்</u>

1. **B.Vasanthi, Sri Lakshmi Electrovoice, Karur** மதிப்பீட்டை விட 0.12% சதம் குறைவு
2. RPS Construction, **Karur** மதிப்பீட்டை விட 3. 14% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு அவசர கூட்ட தீர்மானம் எண். 1994, நாள்.06.01.2020ம் தேதி ரூ.1.50 லட்சத்தில் பொதுநிதியின் கீழ் செலவு செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதையும் மன்றம் அனுமதிஅளிக்கலாம்.
2 மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **B.Vasanthi, Sri Lakshmi Electrovoice, Karur** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம் (இ1/9379/2019)

தீர்மான எண்.2024 அனுமதிக்கப்பட்டது

7)திரு.N.நாட்ராயன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு எண்.WP.No.25492/2008-ல் கரூர் நகராட்சி வார்டு – 1, பிளாக் – 50, டி.எஸ்.நெ.344ல் நகராட்சிக்கு சொந்தமான சாலையில் 652½ சதுரடி இடத்திற்கு பட்டா வழங்ககோரி அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, சென்னை அவர்களை 1வது பிரதிவாதியாகவும், ஆணையாளர், நிலம் நிர்வாகத் துறை, சென்னை அவர்களை 2வது பிரதிவாதியாகவும், ஆணையர், நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களை 3வது பிரதிவாதியாகவும், மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களை 4வது பிரதிவாதியாகவும், ஆணையாளர், கரூர் நகராட்சி அவர்களை 5வது பிரதிவாதியாகவும் சேர்த்து

தொடரப்பட்ட வழக்கில் 10.06.2019 அன்று வரப்பெற்ற தீர்ப்பு நகராட்சிக்கு சாதகமாக நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

எனவே, இவ்வழக்கினை வழக்கறிஞர் திரு.பி.ஸ்ரீநிவாஸ் அவர்கள் வழக்கினை நடத்தி முடித்ததற்கு வழக்காடு கட்டணம் ரூ.15,000/— வழங்க கோரியுள்ளார். இவ்வழக்கிற்கு ஏற்கனவே இந்நகர்மன்றத் தீர்மான எண்.06, நாள்.31.01.2011ல் வழக்காடு கட்டணம் ரூ.5000/—க்கு அனுமதியளித்துள்ளது. எனவே, மீதி தொகை ரூ.10,000/—ஐ வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி வழக்காடு கட்டணம் ரூ.10,000/—ஐ நகராட்சி பொது நிதியில் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (எப்1/1993/2018)

தீர்மான எண்.2025 அனுமதிக்கப்பட்டது.

8)வட்டாட்சியர், கரூர் அவர்களின் கடித ந.க.எண்.அ4/4396/2019, நாள்.04.02.2019ம் தேதியிட்ட கடிதத்தில் தென்னக இரயில்வே, சேலம் கோட்டம், கரூர் உட்கோட்டம், கரூர் — திண்டுக்கல் இரயில்வே பாதையில் உள்ள 4 இரயில்வே கேட்டினை அகற்றி (Manned Level Crossing) குகைவழி பாதை அமைக்க தல ஆய்வு செய்த அறிக்கையில் LC2 என்ற எண்ணில் தாந்தோணி கிராமம், புல எண்.407/பி2, கிராம கணக்குகளில் அரசு புறம்போக்கு ஓடை என பதிவாகியுள்ளது என்றும், மேற்படி புல எண் வழியாக வடக்குபாளையம், ஏமூர், மூலக்காட்டனூர், ஆகிய கிராமங்களுக்கு பொதுமக்கள் சென்று வரும் பாதையாக பூஸ்திதியில் உள்ளது என்றும், தாந்தோணிமலைக்கு செல்லும் முக்கிய சாலையாகவும், விவசாயம் செய்வதற்கும், கிராமங்களுக்கு செல்வதற்கும், பொதுபாதையாகவும், ஓடையாகவும் உள்ளது எனவும், மேற்படி கிராம புல எண்.407/பி2ல் குகைவழிப்பாதை அமைத்திட தடையின்மை சான்று அனுப்பிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, புழக்கத்தில் சாலையாக உள்ள பகுதியில் இரயில்வே பாதையை கடக்க குகைவழிபாதை அமைக்க தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு:— அனுமதிக்கலாம். (எப்1/1035/2020)

தீர்மான எண்.2026 அனுமதிக்கப்பட்டது

9)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காய்ச்சல் மற்றும் கொசுக்கள் மூலம் பரவக்கூடிய நோய்களை கட்டுப்படுத்த தடுப்பு நடவடிக்கையாக முதிர்ந்த கொசுக்கள் ஒழிப்பு பணிக்கு புகை மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது, கொசு ஒழிப்பு புகைமருந்து தெளிக்க பயன்படுத்தப்படும் Vehicle Mount Fogging Machine தற்போது ஒன்று மற்றும் பயன்பாட்டில் உள்ளதால் ஒரு இயந்திரம் மட்டும் கொண்டு 48 வார்டு பகுதிகளிலும் புகை மருந்து தெளிக்க அதிக நாட்கள் தேவைப்படுகிறது, இதனால் கொசுக்கள் கட்டுப்படுத்தும் பணியில் போதுமான முன்னேற்றம் இல்லாமல் உள்ளது. ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு ஒரு இயந்திரம் தேவையாக உள்ளதால் மேலும் இரண்டு Vehicle Mount Fogging Machine வாங்கி வழங்க சுகாதார ஆய்வாளர் அவர்களது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தற்போது நகரில் காய்ச்சல் பாதிப்பு அதிகமாக உள்ளதால் நடவடிக்கை எடுக்கக்கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர், சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கரூர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து தற்போது தேவையாக உள்ள இரண்டு புகை தெளிப்பு இயந்திரங்களை பொது மக்களின் பொது சுகாதார நலன் கருதியும் பொது சுகாதார அவசர அவசியத்தை கருதியும் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்திட அனைத்து பகுகளிலும் கொசு ஒழிப்பு புகைமருந்து உடனடியாக தெளிக்க 50 லிட்டர் டீசல் கொள்ளவு கொண்ட இரண்டு இயந்திரங்கள் தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட விதி 1920 பிரிவு—15ன் கீழ் ரூ.12.00 லட்சதில் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் மேற்கண்ட இயந்திரத்தினை கொள்முதல் செய்ய 07.02.2020ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | புகைதெளிப்பான் கருவி ஒன்றின் விலை ரூ. |
|---|---|---|
| 1) | System Engineering, Chennai | ரூ.5,94,600 |
| 2) | S.N.Enterprises, Chennai | ரூ.5,97,500 |
| 3) | Vigneshwari Industrial Products, Chennai | ரூ.5,99,000 |

மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள System Engineering, Chennai நிறுவனத்தின் விலைவிபரம் உள்ளூர் மார்க்கெட் விலைவிபரத்திற்கு ஏற்ப இருப்பதால் பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான மேற்படி புகை தெளிக்க Vehicle Mount Fogging Machine கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும் கொசுக்கள் உற்பத்தி மிகவும் அதிகாமாக இருப்பதை கட்டுப்படுத்திட மேற்கண்ட இயந்திரத்தினை கொள்முதல் செய்து அதற்கு செலவினத்தொகை ரூ.11,89,200/—ஐ தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து பொதுநிதியின் கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (எச்1/10008/2019)

தீர்மான எண்.2027 அனுமதிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.

10) கரூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு துப்புரவு பணிகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் சுத்தம் செய்யும் பணிகள் 2019—2020ம் ஆண்டுக்கு தேவையான தளவாட சாமான்கள் சப்ளை செய்யும் பணிக்கு 18.02.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும், வைக்கப்படுகிறது.

| வ. எண். | இனத்தின் பெயர் | எண்ணிக்கை | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் விலை விகிதம் ரூ. | ஸ்ரீ நவலடி அசோசியேட்ஸ் நாமக்கல் விலை விகிதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1) | மூங்கில் கூடை | 1 | 439 | 442 |
| 2) | தட்டி மார்(தென்னை) | 1 | 339 | 341 |
| 3) | சாக்கடை கரண்டி பிடியுடன் | 1 | 405 | 407 |
| 4) | 4பல் கொக்கி பிடியுடன் | 1 | 929 | 933 |
| 5) | 2பல் கொக்கி பிடியுடன் | 1 | 738 | 742 |
| 6) | கூட்டு மாறு தென்னை | 1 | 44 | 47 |
| 7) | மண் அள்ளும் பிளாஸ்டிக் சட்டி | 1 | 394 | 398 |
| 8) | மண் அள்ளும் பிளாஸ்டிக் கூடை | 1 | 634 | 640 |
| 9) | அரிவாள் பிடியுடன் | 1 | 638 | 645 |
| 10) | கடப்பாறை (நடுத்தரம்) | 1 | 928 | 937 |
| 11) | மண்வேட்டி பிடியுடன் | 1 | 427 | 435 |
| 12) | 4பல் கொக்கி (சிறியது) | 1 | 228 | 285 |

<u>அ.கு</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்

2)மேற்கண்ட பணிகளுக்கும் குறைவான ஒப்பந்தப்புள்ளியை வழங்கியுள்ள ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/832/2020)

தீர்மான எண்.2028 அனுமதிக்கப்பட்டது

தனி அலுவலர்

கரூர் நகராட்சி